விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 083 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 28 சனிக்கிழமை (12.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## பொருட்களின் விலை சடுதியாக அதிகரிப்பு

நாட்டில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து பொருட்கள், சேவைகள் பலவற்றின் விலை சடுதியாக நேற்று ஒரே நாளில் அதிகரித்துள்ளது.

**விலை உயர்வு ஒரு பார்வையில்...**

- பாண் ஒன்றின் விலை 30 ரூபாயால் அதிகரிப்பு
- கோதுமை மா விலை உயர்வு (பிறீமா - 40/-, செரண்டிப் 35/-)
- ஏனைய பேக்கரி பொருட்கள் 10 ரூபாயால் அதிகரிப்பு
- மதிய உணவுப் பொதி 20 ரூபாயால், கொத்து 10 ரூபாயால், சிற்றுண்டி 5 ரூபாயால் உயர்வு
- மருந்து விலைகள் 29%ஆல் அதிகரிப்பு
- கையடக்க தொலைபேசிகள் மற்றும் உதிரிப்பாக விலை 30% ஆல் உயர்வு
- விமான ரிக்கெட் 27% ஆல் உயர்வு
- சீமெந்தின் விலை 350/- ஆல் உயர்வு
- பால்மா 400 கிராம் 120/-ஆலும் 1 கிலோகிராம் 300/-ஆலும் அதிகரிப்பு

### விலை அதிகரிப்பை தடுக்க முடியாது

## நெருக்கடி எப்போது தீரும் என்று கூறமுடியாது

### நிதி அமைச்சர் பசில் கைவிரிப்பு



(கொழும்பு)

விலை அதிகரிப்பை இப்போது தடுக்க முடியாது. மேலும் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை எப்போது தீரும் என இப்போது உறுதியாகக் கூறமுடியாது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### கரவெட்டியில் பட்டப்பகலில்

## வீட்டின் கூரை பிரித்து 10½ பவுண் நகை களவு

(கரணவாய்)

பட்டப்பகல் வேளை வீட்டின் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 10½ பவுண் தங்க நகைகளையும் 45 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடிபொலிஸ் 15

## வவுனியாவில் விபத்து முதியவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா, பாரதிபுரம் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரண மடைந்துள்ளார்.

குறித்த விபத்தில் வவுனியா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய தர்மராஜா என்ற முதியவர் சம்பவ இடத்திலேயே மரண மடைந்துள்ளது 15

### முல்லைத்தீவில்

## காஸ் அடுப்பு வெடித்தது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் செல்வபுரம் பகுதியில் காஸ் அடுப்பு வெடிப்பு சம்பவம் ஒன்று நேற்று மதியம் பதிவாகியுள்ளது. 15

## வரலாறு காணாத விலையேற்றம்

### பெற்றோல் ரூ.77 டீசல் ரூ.55 ஆல் உயர்வு

(கொழும்பு) வரலாறு காணாத அளவில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ளது. இதன்படி ஒரு லீற்றர் பெற்றோல் 77 ரூபாயாலும் ஒரு லீற்றர் டீசல் 55 ரூபாயாலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதிகரித்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

### கச்சதீவு திருவிழா ஆரம்பம்

## கடற்றொழிலாளர்கள் நல்லெண்ணச் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் அங்கு கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த இலங்கை மற்றும் இந்தியக் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்கு இடை 15

## அதிகரிக்கவுள்ள கட்டணங்கள்

- பஸ் கட்டணம்
- மின்சார கட்டணம், ஆட்டோ கட்டணம்
- எரிவாயு, பாடசாலை வான் கட்டணம்

(கொழும்பு)

விரைவில் எரிவாயு விலை உயரும் என எரிவாயு நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்ததை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.


இது தொடர்பில் கருத்து தெரிவித்த நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சுந்தரலிங்கம் சாந்தலிங்கம்
## ( சாந்தன் )

**மண்ணுலகில் : 1970.01.22**
**விண்ணுலகில் : 2022.03.10**



கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சாந்தலிங்கம் (சாந்தன்) அவர்கள் நேற்று முன்தினம் (10.03.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் - இராசமலர் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற செல்லையா - காமாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும் ரஞ்சினி அவர்களின் அன்புக் கணவரும் கிரிசாந் (சாந்தன் சன்ஸ், KTP ஸ்ரோர்ஸ்), துஸ்நீபன், பிரியங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் டெய்சிராணி (வவுனியா), உதயராணி (பிரான்ஸ்), உசாராணி (பிரான்ஸ்), சத்தியலிங்கம் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வசந்தராசா, யோகராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற கமலேஸ்வரன் (பிரான்ஸ்), செல்வராசா, ராதா, பாப்பா, சரஸ்வதி, ரதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கிட்னாசாமி மற்றும் சிவலிங்கம், நந்தகோபால் ஆகியோரின் அன்புச் சகலனும் காலஞ்சென்ற ஜெயகிருஸ்ணா, காலஞ்சென்ற கிருஸ்ணவேணி மற்றும் வசிகரன், கிருஸ்ணகுமாரி, கிருஸ்ணமோகன், டசிந்தா, துஸ்யந்தன், திவாகரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் தினேஸ்குமார், டிலக்ஸ்குமார், றிவாசன், வினோஜினி, சுபீட்சனா, கோகிலா, விதுசா, பிரசாந் ஆகியோரின் பெரியப்பாவும் பவிசன், துசாந் (பிரான்ஸ்), நர்மதா (பிரான்ஸ்), நிவேதா (பிரான்ஸ்), பெல்க்சா (பிரான்ஸ்), அஜித் (பிரான்ஸ்), அபிராமி, அபராஜிதன், அகல்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் மதிவானி, துருவன், தபிசன், தேசபிரியன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.03.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (10592)

**கோண்டாவில் வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய், யாழ்ப்பாணம்.**

தகவல் :-
**குடும்பத்தினர்**
(கிரிசாந் - சாந்தன் & Son's KPT Store's உரிமையாளர்)
**077 941 1382, 076 682 7793**



# பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- யாழ்.நகரில் இருந்து 5 km தொலைவுக்கு உட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு
**076 097 3121** ®



## 7 பலி

(கொழும்பு)
இலங்கையில் மேலும் 7 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,381 ஆக அதிகரித்துள்ளது. (ம)

# கண்ணீர் அஞ்சலி

விலங்கியல் துறையில் செயல்முறை விளக்குனராக (Demonstrator) கடமையாற்றும் **கு.மயூரதி** அவர்களின்



தந்தை
**மாசிலாமணி குகபிரகாசம்**
தாய்
**குகபிரகாசம் சுகுணா**

ஆகியோரின் 10.03.2022 (வியாழக்கிழமை) திடீர் அகால மரணத்தினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களிருவரினதும் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(10574)

**தலைவர் மற்றும் ஊழியர்கள்,**
**விலங்கியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# மரண அறிவித்தல்



திருமதி
## குருநாதன் கனகரத்தினம்
## ( கனகம்மா )

**தோற்றம் : 11.02.1927 மறைவு : 09.03.2022**

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு மயிலங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குருநாதன் கனகரத்தினம் அவர்கள் கடந்த 09.03.2022 (புதன்கிழமை) அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டித்தம்பி குருநாதன் (J.P) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வராணி, தெய்வேந்திரன் (ஓய்வுபெற்ற சீமெந்து தொழிற்சாலை கே.கே.எஸ் உத்தியோகத்தர்), லோகேந்திரன் (பிரான்ஸ்), லோகராணி (பிரான்ஸ்), குனேந்திரன் (பிரான்ஸ்), ஜெயந்திரன் (பிரான்ஸ்), ஜெயராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற மங்களேஸ்வரி, வனிஜா (பிரான்ஸ்), செல்வராசா (பிரான்ஸ்), ரமணி (பிரான்ஸ்), மதி (பிரான்ஸ்), புஸ்பராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெகசுதன் (மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), ஜெகதீபன் (U.K), பிரியங்கா (கனடா), இந்துஜா (கனடா), விஷ்ணுஜன், மதுசாந்தன் (பிரான்ஸ்), மயூரன் (பிரான்ஸ்), சுஜன் (பிரான்ஸ்), வானுஜன் (பிரான்ஸ்), சௌமியா (பிரான்ஸ்), மிதுலன் (பிரான்ஸ்), ஜெனுஜன் (பிரான்ஸ்), ஜெனுஸ்கா (பிரான்ஸ்), கனிஸ்ரா (கனடா), அமெந்தா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரமிஜன், பிரமகின், கஸ்மிலா (கனடா), மரூஷன் (கனடா), நேத்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.03.2022) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (10591)

**ஏழாலை தெற்கு, மயிலங்காடு,**
**சுன்னாகம்.**
தெய்வேந்திரன் (மகன்) : 077 615 7166

தகவல் :-
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி நடத்தக் கூடியவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும்

## சிறிதரன் எம்.பி காட்டம்



(கொழும்பு)

**உலக நாடுகளிடம் கடனை வாங்கி, மக்களை வரிசையில் விடுவது தான் ஆசியாவின் ஆச்சரியமா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வியெழுப்பியுள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: நாட்டின் இனப்பிரச்சினை மற்றும் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை என்றால் கோட்டாபய அரசாங்கம் பதவி விலகி ஆட்சி நடத்தக் கூடியவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும்.

அதை விடுத்து மக்களைத் துன்புறுத்தக்கூடாது. இந்தியாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் அப்படியே கைவிடப்பட்டுள்ளது.

எப்போது இனி விமான சேவைகள் ஆரம்பமாகும். வடக்கு -கிழக்கிலுள்ள மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேறி விடுவார்கள் என்று எண்ணி இந்த விமான நிலையத்தை கிடப்பில் போட்டுள்ளீர்கள். இது தான் உண்மை. மக்களை வாழ விடுங்கள்.

இதுதவிர கிளிநொச்சி கிராஞ்சி, பள்ளிக்குடா பிரதேச மீனவர்கள் அச்சத்துடன் தமது தொழிலை மேற்கொள்கின்றனர்.

கடந்த 3 ஆம் திகதி கடற்படையால் தாக்கப்பட்ட மீனவர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீனவர்கள் தவறு செய்தால் கைது செய்து ஒப்படையுங்கள். அத்துடன் இப்போது அங்கே பாஸ் காண்பித்த பின்னரே கடல் தொழிலுக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

இதைவிட எங்கள் மீது குண்டு மழை பொழிந்தவர்களை நாம் மறக்க மாட்டோம். உக்ரைன் விமானிகள் இங்கே வந்து எங்கள் மீது குண்டு வீசினார்கள். இப்போது காலம் மாறியுள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

## மோசமடையும் நாட்டு நிலைமையால் பாதிப்படையும் சுற்றுலாத்துறை

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடி மற்றும் டீசல் தட்டுப்பாடு காரணமாக நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தமது பயணங்களை நிறுத்தியுள்ளதாகச் சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் விடுதி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளின் பயணங்களுக்கு எரிபொருளை வழங்க முடியாமையால் யால மற்றும் ஏனைய பூங்காக்களின் இயக்க வேகம் குறைந்துள்ளன.

அத்துடன் விடுதிகளில் உணவு தயாரிப்பதற்கு எரிவாயு தட்டுப்பாடு காரணமாக உணவு தயாரிப்பதில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சிக்கல் நிலையினாலேயே சுற்றுலாப் பயணிகள் விரக்தியுடன் இலங்கையை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளதாகவும், இது சுற்றுலாத் துறைக்குப் பலத்த அடியாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

## மண்ணெண்ணெய்க்காக காத்திருக்கும் மக்கள்



(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்துள்ளனர்.

கிரான்ட்பாஸ் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்கு பெருமளவான மக்கள் வரிசையில் நிற்பதனை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அதிகரிப்பு! அதிகரிப்பு!

## கோதுமை மாவின் விலை சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 35 ரூபாவினால் அதிகரிக்கவுள்ளதாக செரெண்டிப் நிறுவனம் தெரிவித்துள்ள நிலையில் 40 ரூபாவினால் அதிகரிப்பதாக ப்ரீமா நிறுவனம் அறிவித்துள்ளதென விற்பனை முகவர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

## பாணின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை அதிகரிப்புக்கு ஏற்ப பேக்கரி பொருட்களின் விலை அதிகரிக்கப்பட உள்ளது.

இதனடிப்படையில் பாண் ஒன்றின் விலை 20 முதல் 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் இந்த விலை அதிகரிப்பு அமுல்படுத்தப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

## கொத்து, உணவுப்பொதிகள் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

உணவுப் பொதியின் விலையானது நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் 20 முதல் 30 ரூபாய் வரையில் அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளது.

மேலும், கொத்து ரொட்டியின் விலையை 10 முதல் 15 ரூபாவினால் அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருட்களின் விலை சடுதியாக அதிகரித்ததன் காரணமாக, இந்த விலை அதிகரிப்பு நடைமுறைக்கு வரவுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## அதிகரிக்கப்பட்டது பால்மாவின் விலை

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பால்மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி இறக்குமதி செய்யப்படும் 1 kg பால்மாவின் விலை 300 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன். 400 கிராம் பால்மா பக்கெட்டின் விலை 120 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி)

## விமான பயணச் சீட்டுகளுக்கான கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

விமான பயணச் சீட்டுகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.


அதற்கமைய, அனைத்து வகையான விமான பயணச் சீட்டுகளுக்கான கட்டணங்கள் 27% இனால் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடன் அமுலாகும் வகையில் இந்த கட்டண அதிகரிப்பு அமுலாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



உயர்கல்வி மற்றும் துறைசார்வழிகாட்டல் யாழ்ப்பாண கல்விக்கண்காட்சி 2022 நேற்று வலம்புரி ஹோட்டலில் வலம்புரிப் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்டது. கல்வி பொதுத்தராதர உயர்தரத்தில் கல்வி கற்றவர்களுக்கான தொழில் முயற்சிக்கான வழிகாட்டல் கண்காட்சியாக இது உள்ளது. இதில் தென்னிலங்கையினை சேர்ந்த 36 கல்வித்துறைசார்ந்த தனியார் நிறுவனங்களும் 15 அரச திணைக்களத்துடன் இணைந்த நிறுவனங்களும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கி, துறைசார்ந்தவர்களினால் மாணவர்களுக்கு தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் வடமாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் யாழ் மத்திய கல்லூரி அதிபர் எ.எழில்வேந்தன் மற்றும் அரச, தனியார் துறைசார்ந்த கல்விக்கான துறைசார்ந்த நிபுணர்கள் பிரதித்துவ அலுவலர்கள் மாணவர்கள் பலரும் கலந்துகொண்டனர். இக் கண்காட்சி இன்றும் நடைபெறும். (படங்கள் : சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மனவளக் கலை மன்ற அறக்கட்டளை, யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளாரின் ஆன்மிகச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொக்குவிலில் அமைந்துள்ள அறிவுத் திருக்கோவில் மண்டபத்தில் அதன் தலைவர் மனவளக் கலைப் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மனவளப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து துணைப் பேராசியர்களாக நியமிக்கப்பட்ட 20 பேருக்கு சான்றிதழ்களை பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் வழங்கி வைத்தார். (படம்:- ரவிசாந்)

# யாழ். சர்வதேச திரைப்பட விழா; 4 ஆவது நாளிற்கான திரையிடல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றுவரும் 7ஆவது யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழாவின் நான்காவது நாளிற்கான காட்சிப்படுத்தல்கள் இன்று காலை 10.00 மணிக்கு டேவிட் போன்வில்லேயின் "த லாஸ்ற் பாத்" எனும் போர்த்துக்கல் நாட்டின் அறிமுகத் திரைப்படத்துடன் ஆரம்பிக்கின்றது.

தேவாலயத்திற்காக வாழ்க்கையினை அர்ப்பணித்த கன்னியாஸ்திரியான ஜோசபினா, பராமரிக்க யாரும் இல்லாமல் தவிக்கும் அவளுடைய பதினைந்து வயது மருமகனை தத்தெடுக்கின்றாள். இதன் விளைவாக ஏற்படும் சிக்கலான உணர்வுப் போராட்டத்தை இத்திரைப்படம் முன்வைக்கின்றது.

அடுத்து பகல் 1 மணிக்கு "ரோக்கிங் எபவுற்றீஸ்" எனும் பிரான்சிய-சூடானிய ஆவணத் திரைப்படம் திரையிடப்படவுள்ளது. இது சுஹைப் ஹஸ்பெல்மரி என்பவரால் சூடான் சினிமாவின் வரலாற்றை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது.

மாலை 4.45க்கு திரையிடப்படவுள்ள "நோற்றே டாமே டியூ நில்" திரைப்படமானது, ஸ்கோலஸ்கியூ முகஸ்ம்கா என்பவரின் நாவலைத் தழுவி பிரான்ஸ்-பெல்ஜியம்-ருவாண்டா கூட்டிணைப்பில் அற்றிக் ரஹ்மி என்பவரால் இயக்கப்பட்டது.

அத்துடன் நண்பகல் 12.00 மற்றும் பிற்பகல் 3.30க்கு விருதுக்காகப் போட்டியிடும் இலங்கை, இந்தியா, ரஸ்யா, மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் குறுந்திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இக்காட்சிகள் அனைத்தும் இலவசம். (ம)


யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய் சங்கம்)

**விசேட பொதுக் கூட்டம்**

காலம் : 13.03.2022
நேரம் : மு.ப 10.00 மணி
இடம் : சுப்பிரமணியம் மண்டபம்

நடைபெறவுள்ள விசேட பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல் கடிதம் கிடைக்கப்பெறாவிடின் இவ் அறிவித்தலைத் தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்று தாங்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(C-3949) செயலாளர்


# குத்துச்சண்டை வீராங்கனை இந்துகாவிற்கு யாழில் கௌரவிப்பு

சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்று முழு தமிழினத்திற்கும் பெருமை சேர்த்த மாங்குளத்தைச் சேர்ந்த இளம் வீராங்கனை இந்துகாதேவி கணேஷ் அவர்களுக்கு யாழில் வரவேற்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ். திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

அமெரிக்கா நியூ ஜெர்சி மாகாணத்தில் இயங்கிவரும் தமிழ் சமூக சேவை அமைப்பான கல்வி, புத்தாக்கம், தலைமைத்துவம் அமைப்பின் ஸ்தாபகர் ஞானசேகரன் அவர்களின் ஏற்பாட்டில் யாழில் இருந்து ஆசிரியர் ஜெகநாதன் மோகன், செல்லையா குணசேகரன், திருமதி சுதர்னி சேகரன் ஆகியோரின் ஒருங்கிணைப்பிலும் மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2531

நிந்துஜா

பொண்டாட்டி சண்ட போட்டாலே ஏன் போடுறான்னு கண்டுபிடிக்க முடியல.



இதுல ஏன் ரஷ்யா-உக்ரைன் போர் நடக்குதுன்னு கேக்குறாங்க தம்பி.

தினேஷ்

படிக்கிற வயசில வறுமைக்காக வேலைக்கி போய் சம்பாதிச்சி கைல காச பாத்துட்டேளா... அதுக்கு அப்புறம் உளக்க படிக்க தோனாது... அனுபவத்தல சொல்றேன்.



தாரணி




War நடக்குற உக்ரைன், ரஷ்யாவில கூட இன்னும் பொருட்களுக்கு விலை அதிகரிக்கல



ஆனா அத வச்சு, எங்க நாட்டுல எல்லா பொருட்களுக்கும் விலை ஏத்த ஆரம்பிச்சுட்டானுங்க தம்பி

முரளி

**ஆண்கள்**



தன் மனைவியிடம் பேசும் போது



பிறர் மனைவியிடம் பேசும் போது

தீபிகா

வாழ்க்கையில ஒவ்வொருத்தனுக்கும் நடந்த ஒரு கொடுமையான விஷயம்....



நாம எந்த வாத்தியாருக்கு பயந்து பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டோமோ.... அதே நாள்ல அந்த வாத்தியாரும் பள்ளிக்கூடத்திற்கு லீவு போடுறதுதான்.

சந்தோசினி

பகலில் தூங்கி மாலையில் எழுந்த பின்...



விடிந்து விட்டதா என குழம்பி தவித்த நாட்கள் எவ்வளவு அழகானவை..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**அழைப்பின் பேரில் (On Call) பேருந்து (Bus), வான் (van), சிறியவகை பொருட்கள் காவுவண்டி (Mini Truck) வாகனங்களை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடம்மிருந்து கேள்விப்பத்திரம் கோரல் 2022 / 2023**

தவிசாளர், கொள்வனவுக் குழு அவர்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (On Call) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகுதி வாய்ந்த கம்பனிகள், அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் |
|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 12-16 | 06 |
| 1.2 | பிரயாணிகள் வான், /Passenger Van | 08-10 | 04 |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus | 42-54 | 05 |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck | 02 | 02 |

விண்ணப்பிக்க தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை மார்ச் 25 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

1. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.
2. மேற்படி வாகனத்தின் கிலோமீற்றர் பதிவுகள், கணிப்பீடுகள் யாவும், சேவை வழங்கும் நாட்களில் வருகைதரும் மற்றும் வெளியேறும் நேரங்கள் அனைத்தும் பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் பிரதான வளாகத்தில் இருந்தும் அறிவியல் நகருக்கான வாகனமாயின் அறிவியல்நகர் வளாகத்தில் இருந்தும் கணிப்பீடு செய்யப்படும். இதற்கான ஏடுகள் நிர்வாகக் கிளையில் அல்லது பாதுகாப்பு பிரிவின் பிரதான வாயிலில் வைத்திருக்கப்படும். அத்துடன் தினசரி வாகன ஓட்டப்பதிவேடு உரியமுறையில் பேணப்படல் வேண்டும்.
3. நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை கொண்டிருத்தல் அவசியமானது
   - பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
   - வாகன உற்பத்தி ஆண்டு 2015ம் ஆண்டு அல்லது அதற்கு பிந்தியதாக இருத்தல் வேண்டும்.
   - தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் அவரது பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.
   - குறைந்தது மூன்று (03) வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
   - வருடாந்த வருமானம் கடந்த மூன்று (03) வருடங்களில் குறைந்தது ரூபாய் ஒரு மில்லியனாக (RS1,000,000.00 ) இருத்தல் வேண்டும்.
   - ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.
4. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள், மற்றும் வணிகத்தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும், அத்துடன் அவற்றிற்கான உரிய சான்றுகள், மற்றும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
5. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு (Bid security) வைப்புப்பணமாக ரூபா 15000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து 23.07.2022 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்புப் வைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக, காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
6. முழுமையான கேள்வி விண்ணப்பத்தினை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூபா 5,000.00 நிதியாளர் யாழ்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கி 97000009000387 கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பிரதிப் பதிவாளர், பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூலஆவணம் (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாக பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அழைப்பின் பெயரில்" (On Call)/ வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் - 2022 - 2023" எனத் தலைப்பிட்டு பதிவாளர், கேள்விச்சபை, த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 25.03.2022 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் அல்லது கையளித்தல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன், மேற்குறிக்கப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படாத, முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு: பிரதிப்பதிவாளர்/ பொதுநிர்வாகக் கிளை - Tele: 021 2226517, Fax:- 021 2226517.

**தலைவர், கேள்விச்சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**

(C-3946)


# குடும்ப ஆட்சிக்கு இனி முற்றுப்புள்ளி

(கொழும்பு)

இந்த அரசின் கீழ் இனி எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடமாட்டோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது, "இரட்டைக் குடியுரிமை கொண்ட பசில் ராஜபக்ச பாராளுமன்றம் வருவதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளி யிட்டோம்.

புதிய அரசமைப்பு ஊடாக இதற்கான ஏற்பாடு செய்யப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார். அதனை நம்பினோம். ஆனால், அந்த உறுதிமொழி மீறப்பட்டது.

பசில் ராஜபக்ஷ என்பவர் சூழ்ச்சிக்காரர். நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படுபவர்.

காமினி திஸாநாயக்க காலத்தில் மஹிந்தவுக்கு எதிராகத் தங்காலையில் போட்டியிட்டவர் அவர்.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தோல்வி அடைந்த பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோரியவர். அதற்கு மஹிந்த ராஜபக்ச உடன்படவில்லை.

அமைச்சுப் பதவி என்பது தற்காலிகமானது. அது பறிக்கப்பட்டதையிட்டு நான் கவலை அடையவில்லை.

இலங்கையில் இனி குடும்ப அரசியலுக்கு இடமளிக்கப்படமாட்டாது. குடும்ப ஆட்சி என்பது இத்துடன் நிறைவுக்கு வரும்" என விமல் வீரவன்ச தெரிவித்தார். (நி)


## பெயர் மாற்றம்

இல.04, இராசாவின் தோட்டம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் யோட்ச் ஞானேஸ்வரி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை யோட்ச் ஞானமலர் என பெயர் மாற்றம் செய்கின்றேன். இன்று முதல் எனது சகல ஆவணங்களிலும் யோட்ச் ஞானமலர் எனும் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(10584)

இங்கனம்
உண்மையுள்ள
யோட்ச் ஞானமலர்.


# இராசிபலன்

12.03.2022
மாசி 28, சனிக்கிழமை
நவமி காலை 8.16 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 5.30 மணிவரை
சுபநேரம் - 3.22-4.52 மணிவரை
இராகுகாலம் - 9.22-10.52 மணிவரை

சந்திராஷ்டமம்-அனுசம், கேட்டை

வளவன்



நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், நண்பர்கள் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம்.



பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.



மறைமுக எதிர்ப்புகள் மாறும், கூட்டுத் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், பாக்கிகள் வசூலாகும் . உடல் நலன் சீராகும், போசன சுகமுண்டு.



அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்.



குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.



இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், வரவும் செலவும் மேலோங்கும் நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காண வேண்டிய நாள்.



பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.



இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று இடம் பெறலாம்.



கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வரலாம், கனவு பலிதமுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.



குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்.



ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

பல தடை உடையவனே வாழ்க்கையில் முன்னேறுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் கொள்ளையர்களுடன் அதிகாலை வேளை மோதல்

- நால்வர் படுகாயம்
- மோ.சைக்கிளுக்கும் தீவைப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

தனியார் காணியொன்றில் மணல் ஏற்றியமை தொடர்பாக காணி உரிமையாளர்களுக்கும்-மணற் கொள்ளையர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாகவே நால்வர் காயமடைந்ததுடன்-மோட்டார் சைக்கிள் ஒன்றும் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இதில் பாலாவி தெற்கு கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 47 வயதான தாய் மற்றும் அவரது 20வயதான மகன், 22வயதான மகள் ஆகியோருடன் மணற் கடத்தல் காரர் ஒருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். இவ் மோதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30-33)

## அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கத்தினால் மெய்நிகர் இணைய வழியில் நடத்தப்படும் வாராந்த அரங்கக் கதையாடல் 87 ஆவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி 6473348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (4-6)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சை 2021-டிசெம்பர் (2022 மார்ச்) மற்றும் தேசிய தொழில் தகைமை மட்டம் 5/6 இன் I, II, III ஆம் எழுத்துப் பரீட்சை 2021டிசெம்பர் மற்றும் 2022 மார்ச் ஆகிய இரு பரீட்சைகளுக்குமான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்ப படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர்வரும் 18.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-6)



கரணவாய் கிழக்கில் அமைந்துள்ள வேதாரணிஸ்வரா முன்பள்ளி சிறார்களின் சந்தைவியாபாரம் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவி கல்வி பணிப்பாளர் திரு ச.சத்தியசீலன் கலந்து சிறப்பித்தார். (படம் : மகாலிங்கம்)

## பேச்சுத்திறன் காண் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் "பேச்சுத் திறன் காண் நிகழ்வு-2022" நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கில் அறிவொளி சனசமூக நிலைய தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறும். (4)

## கற்கை நெறிகளுக்கான பதிவினை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண STEPS நிறுவனத்தினால் 2021/2022 இல் உயர்தர பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான ஆங்கில பயிற்சி வகுப்புகள் Foundation English for School Leavers, General English for School Leavers ஆகிய கற்கை நெறிகள் நடத்தப்படவிருப்பதால் உயர்தர பரீட்சையில் தோற்றிய பொருத்தமான விண்ணப்பதாரிகள் 25.03.2022 இற்கு முன்னர் தமது பதிவினை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கற்கைநெறியினை தொடர விரும்பிய மாணவர்கள் 021 222 4580 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவோ அல்லது நேரிலோ அல்லது stepsmoe@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ தங்களது விபரத்தினை அனுப்பி வைக்கவும்.

கற்கையினை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு முடிவில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்படும். மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதால் பதிவு செய்யும் ஒழுங்கிலேயே மாணவர் தெரிவு செய்யப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (4)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளி லிருந்தும் மீண்டு, சுபீட்சமான தொரு வாழ்வு வாழ வேண்டி, இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிராத்தனை வரிசையில், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்குக் கிளிநொச்சி ஆனந்தபுரம் திருவருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்கள் சாமஸ்ரீ தேச மாணிய சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தராஜக்குரு க்கள் ,சிவ திரு வாமதேவன் ஐயா ஆகியோரின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வு இல ங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-6)

# 'நோத் சீ லிமிடட்' தொழிற்சாலை ஊழியர்கள் நேற்று போராட்டம்



(அராலி)

தமது சம்பளத்தை உரிய காலப்பகுதியில் வழங்குமாறு கோரி குருநகரில் உள்ள "நோத் சீ லிமிடட்" உற்பத்தி தொழிற்சாலை ஊழியர்கள் நேற்று தொழிற்சாலைக்கு முன்னால் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

"எமக்கான சம்பளத்தை உரிய காலப்பகுதியில் வழங்கு, ஊழியர்களின் உழைப்பை சுரண்டாதே, ஊழியர்களை பழிவாங்காதே" எனத் தெரிவித்து பதாதைகளை ஏந்தி கோஷமிட்டவாறு சுமார் 60 ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிற்சாலைக்கு முன்னால் போராட்டத்தை ஆரம்பித்தவர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது அலுவலகம் வரை பேரணியாக சென்று அவரிடம் மகஜர் ஒன்றினை கையளித்தனர்.

இதன்போது அமைச்சர் "நிர்வாகத்தில் உள்ள சீரின்மையாலேயே இவ்வாறு நடக்கிறது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களோடு பேசி, ஆக்கக்கூடியது இரண்டு வாரத்திற்குள் தீர்வினைப் பெற்றுத் தருவேன்" என தெரிவித்தார். (4-6-104)

## சிறுதானிய செய்கையாளர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட வயல் நிலங்களில் நெற் செய்கைக்குப் பின்னரான சிறுதானியப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு இடம் பெறவுள்ளது.

தனங்கிளப்பு பொது நோக்கு மண்டபத்தில் இடம் பெறவுள்ள இக் கலந்துரையாடலில் தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட வயல் நிலங்களில் சிறுதானிய செய்கையில் ஈடுபடுகின்ற செய்கையாளர்கள் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு அமைப்பின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (4-6-30)




நெல்லியடியில் அமைந்துள்ள செலிங்கோ நிறுவனத்தினால் பசுமைப்புரட்சி ஒன்றை ஏற்படுத்தும் முகமாக சைக்கிள் பவனி நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. (படம் : மகாலிங்கம்)



யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் கோவை பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை நல்லை ஆதீனத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (படம் : ரவிசாந்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளுடன் இலங்கை வரும் சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி நிதிகள் இருவர் நாளை மறுதினம் திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பினை ஏற்றுக்கொண்டு அவர்கள் நாட்டுக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

குறித்த தினத்தில் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்திக்க உள்ளதுடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திக்க உள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய எதிர்காலத்தில் கடன் உதவி வழங்குவதற்கான நிபந்தனைகள் அடங்கிய யோசனை திட்டமொன்றையும் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் சமர்ப்பிக்க உள்ளனர். (நி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.ஞானப்பிரகாசம் ஞானகுமார்
(MA (Geography) MEd, BA, PGDE,NDT)

கிழக்கு பல்கலைக்கழகத்தில் (12.03.2022) இன்று நடைபெறும் 25 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் புவியியல் முதுகலைமாணி (MA) பட்டத்தினைப் பொற்றுக்கொள்ளும் எமது பாடசாலை ஆசிரிய நண்பன் திரு.ஞானப்பிரகாசம் ஞானகுமார் அவர்களை மேலும் பல பட்டங்கள், பதவிகள், சிறப்புக்கள் பெற்று நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

(C-3939)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/வரணி மத்திய கல்லூரி.

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

Registered with Tertiary and Vocational Education Commission under P25/0026
Established in 1972
Kaithady Manipay Road, Maruthanaarmadam, Chunnakam, Sri Lanka
Telephone No: 021 224 1420 E-mail:- jcinstituteofagriculture@gmail.com

**தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள் க.பொ.த. (உயர்தரம்) சித்தியடையாதோர், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழில் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agticulture** (விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறிகள்)

1. தேசிய தொழில் தகைமை மட்டம் 3 (4 மாதகாலப்பயிற்சிநெறி)
   தகைமை - க.பொ.த. சாதாரணதரம் கற்றிருப்பதுடன் 16-24 வயதிற்குட்பட்டவராக இருத்தல்.

2. தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (6 மாதகாலப்பயிற்சிநெறி)
   தகைமை- NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருப்பதுடன் 16-24 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**பயிற்சி கட்டணம் இலவசம்**

பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 23.03.2022 அன்று காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வி தகைமை சான்றிதழ்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் மற்றும் வேறு இரு நற்சான்றிதழ்களுடன் தற்போது உள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நேரில் சமுகமளிக்கவும்.

**மேலதிக விபரங்கள்**
**அதியர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்**
**மருதனார்மடம்,**
**சுன்னாகம்.**

**தொலைபேசி: - 021 224 1420**
**மின்னஞ்சல் - jcinstituteofagriculture@gmail.com**

(C-3948)

## 35 வது பொதுப்பட்டமளிப்பு வைபவம்-2022
## வேந்தரின் பேருரைக்கான அழைப்பு

தலைப்பு: "கடல்வழி வாணிபமும், வணிகப் போர்களும் அழகக்கோனாரின் எழுச்சியும்"

"Maritime Trade, Trade Wars and Revival of Dynastic Power AD 1300-1500"

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மதிப்புக்குரிய தகைசார் வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் வழங்கும் சிறப்புக்கருத்துரை**
**காலம் : 14.03.2022 (திங்கட்கிழமை)- பி.ப. 3.30 மணி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தின் ஒரு பாகமாக அமையும், பல்கலைக்கழக வேந்தரின் பேருரை இடம்பெற இருக்கின்றது.

இப்பேருரையானது எதிர்வரும் 14 ஆம் திகதி (திங்கட்கிழமை) - பி.ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும். இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் மதிப்புக்குரிய தகைசார் பேராசிரியர்.சி.பத்மநாதன் அவர்கள் **"கடல்வழி வாணிபமும், வணிகப் போர்களும் அழகக்கோனாரின் எழுச்சியும்"("Maritime Trade, Trade Wars and Revival of Dynastic Power AD 1300-1500")** என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்ற உள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக பேராசிரியர் அவர்கள் கொண்டிருக்கும் புலைமைசார் மற்றும் ஆய்வுசார் கருத்துக்கள் யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தினருக்கு குறிப்பாக பல்கலைக்கழக கல்விச்சமூகத்தினருக்கு மிகவும் பயனுறுதி வாய்ந்ததாக அமையப்பெறுவதனால், மேற்படி சிறப்புக் கருத்துரை வழங்கும் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:** மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் கொவிட் 19 பரம்பல் தடுப்புக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுடன் நிகழ்வில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பதிவாளர்**

(C-3947)

JAFFNA EDUCATION FAIR 2022
Your Future Begins Here...
Higher Education & career guidance exhibition

## 2021 - 2022 ஆண்டு உயர்தர மாணவர்களுக்கான விசேட அழைப்பிதழ்!

## உயர்கல்வி மற்றும் துறைசார் வழிகாட்டல் கண்காட்சி!

அனுமதி இலவசம்

உயர்கல்விக்கான உங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள்!

யாழ் மாணவர்களுக்கு 100 % சதவீத புலமைப்பரிசில் வாய்ப்பு

இன்று 12th March 2022

From 10.00 am to 6.00 pm

@ The Valampuri Hotel, Jaffna



விபரங்களுக்கு அழையுங்கள்
0722600620

Main Sponsor: A•P•I•I•T
Co-Sponsors: INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY, LITHAN, CLaaS
Official event partner: CICRA CAMPUS
Electronic Media Partners: DAN, தமிழ் 99.5 99.7
Print Media Partners: STUDENT Life, வலம்புரி
Organized by: EVOLUTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# றியாத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது ட்ரோன் மூலம் தாக்குதல்

(றியாத்)

சவுதி அரேபியாவின் தலைநகரான றியாத் நகரில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றின் மீது டிரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில், யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் அந்நாட்டின் ஆற்றல் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவை மட்டுமின்றி, உலக நாடுகளுக்கான ஆற்றல் விநியோகத்தின் பாதுகாப்பு மற்றும் அதன் ஸ்திரத்தன்மையையும் குறிவைத்து இது போன்ற தாக்குதல்கள் நடத்தப்படுவதாக அந்த அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.



ஏமனில் அரசு படைக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான உள் நாட்டு போரில், ஏமன் அரசுக்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் ஆதரவு அளித்து வருகிறது. இந்நிலையில், அண்மையில் சவுதியில் உள்ள எண்ணெய் ஆலைகள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மீண்டு

(கீவ்)

துருக்கியில்

எவ்வித மு

தெரிவித்துள்

ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் நேரடியாகப் பேசினால் மட்டுமே போர் முடிவுக்கு வரும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர்

## 280 கல்வி நிலையங்களை ரஷ்யா அழித்துள்ளது

(கீவ்)

உக்ரைனில் இதுவரை 280 கல்வி நிலையங்களை ரஷ்யா ஏவுகணை மற்றும் வெடிகுண்டுகளை வீசி அழித்துள்ளதாக அந்நாட்டின் கல்வி மற்றும் அறிவியல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா 2வது வாரமாக போர் நடத்தி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரஷ்யா மீது வலுக்குட உலகளவில் பொருட்களி

(மொஸ்கோ)

ரஷ்யா உலகின் முக்கிய உர உற்பத்தியாளர்களில் ஒன்றாகும்.

இது உலகளாவிய விநியோக சங்கிலிக்கு மிகவும் அவசியம். ரஷ்யாவுக்கு எதிரான மேற்கத்தேய பொருளாதார தடைகள் உலகளாவிய உணவுப் பொருட்களின் விலைகளை உயர்த்தி விடும்.

இதனால் உலகளவில் உணவுப் பொருட்களின் விலை கடுமையாக உயரும் என ரஷ்ய ஜனாதிபதி தெரிவித்தார்.

## ரஷ்ய சொத்துகள் பறிமுதல் சட்டத்தில் கையெழுத்திட்டார் ஜெலன்ஸ்கி



(கீவ்)

ரஷ்ய கூட்டமைப்புக்கு சொந்தமான சொத்துக்களை உக்ரைன் அரசாங்கம் பறிமுதல் செய்யும் சட்டத்தை உக்ரைன் பாராளுமன்றம் கடந்த 3 ஆம் திகதி நிறைவேற்றியது.

இந்நிலையில், உக்ரைனில் உள்ள ரஷ்ய சொத்துக்களைக் கைப்பற்றும் சட்டத்தில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கையெழுத்திட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன. (நி)


# பொருளாதாரத் தடைகளைத் தகர்த்து மீண்டெழுவோம்

## ரஷ்ய ஜனாதிபதி உறுதி

(மொஸ்கோ)

ரஷ்யாவிற்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதித்த மேற்கு நாடுகளுக்கு எதிராக மொஸ்கோ மீண்டும் எழும் என்று ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

உணவு மற்றும் எரிசக்தி விலைகள் உட்பட ரஷ்யா அதன் பிரச்சினைகளைத் தீர்த்து வலுவானதாக வெளிப்படும் என்றும், ரஷ்யா ஒரு வித குறுகிய கால பொருளாதார ஆதாயத்திற்காக தனது இறையாண்மையை சமரசம் செய்வதை ஏற்றுக்கொள்ளும் நாடு அல்ல என்றும் புடின் வலியுறுத்தினார்.



ரஷ்யப் படைகள் அண்டை நாடான உக்ரைனை ஆக்கிரமித்த இரண்டு வாரங்களுக்குப் பின்னர் ஒரு தொலைக்காட்சி அரசாங்கக் கூட்டத்தின் போதே அவர் கூறினார்.

ஐரோப்பாவின் எரிவாயுவில் மூன்றில் ஒரு பங்கை வழங்கும் ஒரு பெரிய எரிசக்தி உற்பத்தியாளரான ரஷ்யா, அதன் எண்ணெயை அமெரிக்கா வாங்குவதைத் தடை செய்வது உட்பட விரிவான பொருளாதாரத் தடைகளால் பாதிக்கப்பட்டாலும், அதன் ஒப்பந்தக் கடமைகளைத் தொடர்ந்து சந்திக்கும் என்று புடின் இதன்போது மேலும் தெரிவித்தார். (நி)

## வடகொரியாவின் ஏவுகணை சோதனையால் தடைகளை அதிகரிக்கவுள்ள அமெரிக்கா

### ஜோ பிடன் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

வடகொரியா மீண்டும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை ஏவியுள்ளதைத் தொடர்ந்து அந்நாட்டுக்கு எதிர்வினையாற்ற அமெரிக்கா தயாராகி வருகிறது.

வடகொரியாவின் ஆயுதத் திட்டங்கள் தொடர்பாக பல விதமான தடைகளை ஏற்கனவே விதித்துள்ள அமெரிக்கா, வடகொரியா அதன் ஆயுதத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு உதவும் வெளிநாட்டு பொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்தை அணுகுவதை தடுக்க உதவும் புதிய தடைகளை விரைவில் அறிவிக்கவுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ம் பேச்சுவார்த்தை தோல்வி!

ல் இடம்பெற்ற ரஷ்ய - உக்ரைன் நாடுகளுக்கிடையிலான அமைதிப் பேச்சுவார்த்தையில் ன்னேற்றமும் ஏற்படவில்லையென உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் ர்ளார்.

தொடுத்து இரு வாரங்களைத் தாண டியும் போர் நீடி த்து வருகிறது.

இருதரப்பிலும் பொதுமக்கள், வீரர்கள் எனப் பலர் உயிரிழந்துள் ளனர்.

பல் வேறு நாடுகளைச் சேர்ந்த வர்கள் பாதுகாப்புத் தேடி உக் ரைனில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

போர் நிறுத்தம் தொடர்பாக உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையே பெலாரசில் இதுவரை நடை பெற்ற பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிந்தன.

துருக்கியில் ரஷ்ய வெளி யுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் மற்றும் உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா ஆகியோர் பேச்சுவார்த் தையை நடத்தினர்.

இந்நிலையில், துருக்கி யில் இடம்பெற்ற போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

# ம் தடைகளால் ன் விலை எகிறும்

ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

சமீபத்தில் ரஷ்யாவின் கச்சா எண் ணெய் இறக்குமதிக்கு அமெரிக்கா அதிரடியாக தடை விதித்தது.

மேலும் பல்வேறு நிறுவ னங்களும் ரஷ்யாவில் தங்க ளது சேவைகளை நிறுத்தி உள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தொடரும் மோதலால்

## ரஷ்யாவிற்கு பலத்த பாதிப்பு

(கீவ்)

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையேயான மோதல் நேற்று 16 ஆவது நாளாக தொடர்ந்து நீடித்து வருகிறது. ரஷ்ய படைகள் உக்ரைனின் முக்கிய நகரங்களில் ஏவு கணை மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வரு கிறது.

அதேநேரத்தில் ரஷ்யாவி ற்கு உக்ரைனும் ஈடுகொடு த்து வருகிறது.

இந்த போரில் இரு நாடு களைச் சேர்ந்த பொதுமக்கள், வீரர்கள் என பலர் உயிரி ழந்து உள்ளனர்.

உக்ரைனிலிருந்து அண்டை நாடுகளுக்கு இதுவரை 20 இலட்சத்திற்கும் அதிகமா னோர் அகதிகளாக வெளி யேறி உள்ளதாக ஐ.நா. அதி காரிகள் தெரிவித்து உள்ள னர்.

உக்ரைன்-ரஷ்யா போர் தொடங்கியதில் இருந்து தற் போது வரை 2,800 இற்கு மேற்பட்ட உக்ரைன் இரா ணுவ தளபாடங்கள் அழிக் கப்பட்டுள்ளதாக ரஷ்ய இரா ணுவ அமைச்சகம் தெரிவித் துள்ளது.

அதேபோல், ரஷ்யாவும் போரில் ஏராளமான இரா ணுவ தளபாடங்களை இழந் துள்ளதாக உக்ரைன் தெரி வித்துள்ளது.

இதுவரை 49 விமானங் கள், 81 ஹெலிகொப்டர்கள், 335 பீரங்கிகள், 2 கப்பல்கள், 526 இராணுவ வாக னங் கள் உள்ளிட்ட ரஷ்ய இரா ணுவ தளபாடங்கள் அழிக் கப்பட்டுள்ளதாக உக்ரைன் சார்பில் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

அதிலும் குறிப்பாக சுமார் 12 ஆயிரம் ரஷ்ய இராணுவ வீரர்கள் போரில் உயிரிழந்து ள்ளதாகவும் உக்ரைன் கூறி யிருப்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைனை சேர்க்க வேண்டும்

## லுதுவேனியா ஜனாதிபதி வலியுறுத்து

(வில்னியாஸ்)

வீர உக்ரைனிய நாடு ஐரோப்பி ஒன்றியத்தில் வரவேற்கப்படுவதற்கு தகுதி உடையது என லிதுவேனியா ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உக் ரைனை சேர்க்க வேண்டும் என்று அந்நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கடந்த மாதம் விண்ணப்பித்தார். ஆனால் இதுவரை அதற்கான நட வடிக்கைகள் எதையும் ஐரோப்பிய ஒன்றியம் எடுக்கவில்லை.

இதற்கிடையே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கூட்டம் நடந்தது. 27 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற இந்த கூட்டத்தில் உக்ரைன் விவ காரம் தொடர்பாக விவாதிக்கப் பட்டது.

அதன்போது லிதுவே னியா ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். (நி)

# ரஷ்யாவில் சேவையை நிறுத்தியது அமேசான்

(மொஸ்கோ)

உக்ரைன் மீதான தாக்கு தலைக் கண்டித்து ஆப்பிள், லிவிஸ், நெட்பி ளிக்ஸ் போன்ற பல்வேறு நிறுவன ங்கள் தங்கள் சேவையை ரஷ்யா வில் நிறுத்தி வைத்துள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா 15 நாட்க ளுக்கு மேலாக போர் தொடுத்து வரு கிறது. இரு நாடுகளை சேர்ந்த வீரர் கள் உட்பட பலர் உயிரிழந்து உள்ளனர்.

ரஷ்ய படைகள் முக்கிய நக ரங்களில்ஏவுகணை, வான்தாக் குதல், பீரங்கி தாக்குதல் நட த்தி வருகிறது. உக்ரைன் அர சும் பதிலடி கொடுத்து வருகிறது.

ரஷ்யாவில் தங்களது செய ற்பாடுகளை நிறுத்துவதாக கொக்கோ கோலா, பெப்சி போன்ற குளிர்பான நிறுவன ங்களும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உக்ரைன் தலைநகரை நெருங்கும் ரஷ்ய படைகள்



(கீவ்)

உக்ரைன் தலைநகர் கீவ் வுக்கு மிக அருகில் ரஷ்ய துருப்புகள் நெருங்கி வந்துள் ளதாக தகவல் வெளியாகியுள் ளது.

13 மைல்கள் தொலைவில் ரஷ்ய இராணுவ டாங்கி களும், இராணுவத்தினரும் அடையாளம் காணப்பட்டு ள்ளனர்.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு தொடங்கி இர ண்டு வாரங்களுக்கு பின் னர், ரஷ்ய துருப்புகள் தலைநகர் கீவ்வை நெருங் கியுள்ளதாக தெரியவந்துள் ளது.

தலைநகர் கீவ்வின் புற நகரப் பகுதியான இர்பின் நகரில் ரஷ்ய துருப்புகளின் நடமாட்டம் கண்டறியப்பட்டுள் ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையினரின் பிடியில் உள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## அன்புபுரம் கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அன்புபுரம் இறங்கு துறையை அண்மித்த பகுதிகளில் கடற்படையினரின் பிடியில் உள்ள 1197 ஏக்கர் காணியினை விடுவிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான சந்திப்பு ஒன்று கடந்த 9 ஆம் திகதி குறித்த இறங்கு துறைப் பகுதியில் இடம்பெற்றது.

இறங்கு துறையை அண்மித்த பகுதியில் கடற்படையினர் தமது கண்காணிப்பு பணிக்காக காணிக் கோரிக்கையை விடுத்து வரும் நிலையில் அப்பகுதி மக்கள் மற்றும் கடற்றொழிலாளர் அமைப்பு என்பன கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன.

இச்சந்திப்பின் போது தமது உறுதியான நிலைப்பாட்டினை கடற்படைக்கு எதிராக மக்கள் வெளிப்படுத்தினர்.

மக்களின் பொருளாதார நிலைமைகள் கடந்த காலங்களில் கடற்படையினரின் செயற்பாடுகளால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் என்பன சுட்டிக்காட்டப்பட்டது.

யுத்த காலத்துக்கு முன்பு மக்கள் குடியிருந்த 1197 ஏக்கர் குடியிருப்பு நிலம் கடற்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கின்றமையை இச்சந்திப்பில் எடுத்துக்காட்டப்பட்டது.

இச்சந்திப்பின்போது கிராம உத்தியோகத்தர், முழங்காவில் பங்குத்தந்தை, பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் கடற்படை அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.(4-6-350)



கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய மாணவர்களுக்கு பசும்பால் வழங்கும் செயற்றிட்டம் கடந்த 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் அ.பங்கயற்செல்வன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. (படம்:கிருஸ்ணகுமார்)

## பூஸ்டர் தடுப்பூசி வழங்கல்

(பனிக்கன்குளம்)

மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான மூன்றாம் கட்ட தடுப்பூசி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை வழங்கப்படவுள்ளது என மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (4-6-281)

# பிரதேச சபை தவிசாளர்கள் மாவட்ட செயலகம் முன்பு போராட்டம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நான்கு பிரதேச சபைகளை சேர்ந்த தவிசாளர்கள், உறுப்பினர்கள் இணைந்து நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

அரசாங்கத்தினுடைய 2022 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின் ஊடாக வட்டாரத்திற்கு 4 மில்லியன் ரூபாய் பெறுமதியான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் திட்டத்தினூடாக வட்டார உறுப்பினர்களின் ஆதரவோடு அந்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இது தொடர்பில் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களில் இது தொடர்பான விளக்கக் கூட்டங்கள் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

இந்த வேலைத் திட்டங்களில் வட்டார உறுப்பினர்கள் ஊடாக வட்டாரத்தில் என்ன வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பான தகவல்கள் எடுக்கப்பட்டிருந்தன.

பின்னர் வட்டார உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டதற்கு மாறாக மாவட்டத்தினுடைய அபிவிருத்திக் குழு தலைவர் காதர் மஸ்தானால் வழங்கப்படுகின்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

தங்களிடம் கோரி தங்களின் ஆலோசனைகளுக்கு அமைவாக பெற்றுக்கொண்ட வேலைத் திட்டங்களை அபிவிருத்திக் குழுத்தலைவர் மாற்றி அமைத்த செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய மகஜரை பெற்றுக் கொண்டார்.

குறித்த மகஜரை உரிய தரப்பினரிடம் அனுப்பி வைப்பதாக மேலும் தெரிவித்தார்.(4-6-281)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 180 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 300 | 400 |
| தக்காளி | 230 | 230 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 90 | 80 |
| கோவா | 100 | 120 | 110 | 150 |
| கரட் | 200 | 200 | 330 | 350 |
| பூசணி | 140 | 130 | 120 | 150 |
| புடோல் | 200 | 180 | 180 | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 100-250 | 280 |
| பெரிய வெங்காயம் | 200 | 140 | 170 | 200 |
| பாகற்காய் | 350 | 300 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 160 | 240 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 200 | 180 | 100 | 200 |
| லீக்ஸ் | 120 | 150 | 140 | 160 |
| பீற்றூட் | 160 | 160 | 180 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 280 | 240 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | 1000 | 1400 |
| போஞ்சி | 250 | 280 | 270 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 150 | 180 | 160 |
| வெங்காயப்பூ | 160 | 140 | 140 | 280 |
| முள்ளங்கி | 50 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 60 | -- | 80 | -- |

# மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பதியரை மோதியது பேருந்து

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். புதுக்குடியிருப்பு பரந்தன் வீதி விசுவமடுப் பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பருத்தித்துறை பேருந்து வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன்-மனைவி இருவர்களையும் மோதித் தள்ளியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் பேருந்தின் முன்சக்கரத்திற்குள் புகுந்த நிலையில் காயத்திற்கு உள்ளான இருவரும் மக்களால் மீட்கப்பட்டு தருமபுரம் ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

இந்த விபத்தினை தொடர்ந்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

பேருந்தின் சாரதி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சம்பவத்தினை தொடர்ந்து அங்கு கூடிய இளைஞர்கள் பேருந்தினை எடுக்கவிடாமல் முரண்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் சம்பவ இடத்தில் பிரசன்னமாகி நிலைமையினை கட்டிற்குள் கொண்டு வந்தனர்.

விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-281-316)

## வீதியில் கிடந்த பேர்ஸை உரியவரிடம் ஒப்படைத்த இராணுவம்




(அராலி)

அல்வாய் பகுதி வீதியில் நேற்று முன்தினம் பேர்ஸ் ஒன்று விழுந்த நிலையில் காணப்பட்டது. இதனை அவதானித்த 515 ஆவது படைப்பிரிவு இராணுவ வீரர்கள் குறித்த பேர்ஸினை எடுத்து நேற்று அல்வாயைச் சேர்ந்த அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளனர். அந்த பேர்ஸில் 10,400 ரூபாய் பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களுக்கு மின் தடை

## மின்னொளியில் பிரகாசிக்கும் பாராளுமன்றம்



(கொழும்பு)

நாட்டுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய, நாட்டின் உயர் சபையான பாராளுமன்றம், அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் தமது அமர்வை நடத்தியபோது இந்த விடயம், பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மின்சாரத்துக்கான கடும் நெருக்கடியால், அரச நிறுவனங்கள், கடுமையான ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று சுற்றறிக்கை மூலம் வலியுறுத்தப்பட்டது.

எனினும் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து மின்சார விளக்குகள் மற்றும் குளிரூட்டல்களும் நேற்று முன்தினம் வழமை போல் இயக்கப்பட்டதாக பிரதி சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

பொதுமக்கள், அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படும் இந்த நேரத்தில் பாராளுமன்றம் அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

எரிசக்தி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நாட்டிற்கு உதவுவதற்காக இந்த வளாகத்திற்குள் கூடுதல் விளக்குகளை அணைக்க வேண்டும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன இந்த வாரம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மக்களுக்காக பதவியை துறக்கத் தயார்

## தயாசிறி அதிரடி

(கொழும்பு)

"நாட்டை மீட்டெடுக்க எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்கு நாம் தயார். தேவையான நேரத்தில் பதவிகளைத் துறந்துவிட்டு, மக்களோடு மக்களாக வீதியில் இறங்கிப் போராடுவோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அரசில் நாம் அங்கம் வகித்தாலும் பங்காளிக் கட்சிகளுடனான எமது அரசியல் நடவடிக்கை தொடரும். நாம் எவரையும் கைவிடவில்லை.

தேவை யான நேரத்தில் பதவிகளைத் துறந்துவிட்டு போராடத் தயார். எவரினதும் வாலாக இருக்க நாம் விரும்பவில்லை. எதிர் காலத்தில் பலமான கூட்டணி அமைக்கப்படும்" என்றும் தெரிவித்தார். (நி)

# 500 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு வழங்கியது இந்தியா

(கொழும்பு)

எரிபொருள் கொள்வனவுக்காக இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க இந்திய மத்திய வங்கி அனுமதியளித்துள்ளது.

இந்தியாவில் உள்ள ஏற்றுமதியாளர்களிடமிருந்து மொத்தக் கடனில் குறைந்தது 75 % பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் மீதமுள்ள 25% இந்தியா தவிர்ந்த வேறு நாடுகளிடமிருந்து கொள்வனவுகளை மேற்கொள்ளப் பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# சமையல் எரிவாயு விநியோகம் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

சந்தைக்கான சமையல் எரிவாயு விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், நேற்று முதல் விநியோகம் வழமைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே சந்தையில் நிலவும் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு, எதிர்வரும் சில தினங்களுக்குள் தீர்வு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டை வந்தடைந்துள்ள இரண்டு கப்பல்களில் உள்ள எரிவாயுவை தரையிறக்கும் பணிகளை ஆரம்பிப்பதுடன், நாளொன்றுக்கு, 80,000 எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விடுவிக்கவும் லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது. (நி)

# ஆசிய அபிவிருத்தி வங்கி 2 பில்லியன் டொலர் கடன் உதவி

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த ஆண்டு இலங்கையின் செயற்பாட்டுத் திட்டங்களுக்காக 2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை ஒதுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் சத்சுகு அசகவா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போதே இந்த விடயத்தினைத் தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கி கடந்த வருடம் இலங்கைக்கு 750 மில்லியன் அமெரிக்க டொலர்களை சலுகைக் கடனாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல்

## குப்பைமேடும் குன்றில் மணியும்

தீயவை கவர்ச்சியானவை; விரைந்து விளைவை ஏற்படுத்தி விடுபவை.

நல்லவை கவர்ச்சியற்றவை ; காலம் தாழ்த்திப் பயன் அளிப்பவை.

மேற்கூறிய காரணங்களினாலேயே பலர் தீயவையால் கவரப்பட்டு விளக்கொளிக்கு மாயும் விட்டிற் பூச்சிகளாய் ஆகின்றனர்.

நம்மைச் சுற்றி விதவிதமான தவறுகள் நடக்கின்றன. இந்த அநியாயம் போதாதென்று அதைச் சரியான செயல்தான் என வாதிடவும் அதைப் பெருமையாகக் கருதவும் பேசவும் கூட ஆட்கள் இன்றைய உலகில் இருக்கிறார்கள்.

இவர்களின் போலி வாதங்களிலும், கவர்ச்சிப் போர்வையிலும் மயங்குகிறவர்கள் எந்தத் தவறிலும் ஒரு நியாயம் இருப்பதாக எண்ணிக் கொண்டு படுகுழியிலும் பாதாளத்திலும் விழுகின்றனர்.

சாதாரணப் பொய்யைச் சொல்லுவது முதல், பெருங்குற்றங்கள் வரை அனைத்தும் இதில் அடங்கும்.

இதெல்லாம் பெரிய தவறா? என்று நம்மைச் செய்யத் தூண்டுபவர்களை முதலில் இனம் கண்டு கொள்ள வேண்டும்.

இவர்கள் நிச்சயம் நம்முடைய நலம் விரும்பிகளாக இருக்க மாட்டார்கள்.

நம்மை உண்மையாக நேசிக்கும் உள்ளங்கள் நாம் உண்மையோடும், ஒழுக்கத்தோடும் இருக்க வேண்டும் எனறே விரும்புகின்றன. அதன் படி செயற்பட்டால் அனைவரின் பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் பாத்திரமாய் நாம் விளங்க முடியும்.

தவறான நன்மைகள் பெருகிவிட்டதால் எதுவும் சகஜம் இதுவும் தவறில்லை என்று நாமும் நம் இயல்பை மாற்றிக் கொள்ள எண்ணுவது பொருத்தமானது.

எப்படி எவ்வளவு நட்சத்திரங்கள் பெருகினாலும் நிலவின் மதிப்புக் குறையாதோ–

அதே போல்,

தீய சக்திகள் எவ்வளவு பன்மடங்காகப் பெருகினாலும் உண்மைக்கும், தேவைக்கும் அழியாப் புகழ் இருந்தே தீரும்.

இன்னும் சொல்லப் போனால், பெரும்பான்மை பெருகும் போது தான் சிறுபான்மையின் அபூர்வம் உலகுக்குத் தெரியும்.

தவறுகள், குற்றங்கள், தீமைகள் என்றெல்லாம் அழைக்கப்படும் பல சக்திகள் வெள்ளமாக உருவெடுக்கும் போது அந்த ஆற்றின் போக்கில் நாமும் அடித்துக் கொண்டு போய்விட முடியாதபடி நம்மை நாம் காப்பாற்றிக் கொண்டு எதிர்நீச்சல் போட்டுப் பார்க்க வேண்டும். அல்லது தத்தளித்துக் கரை சேரவாவது முயல வேண்டும்.

சுற்றிக் குப்பைகள் கிடந்தாலும் – எவ்வளவு காலம் கிடந்தாலும்– குன்றில் மணியாய் நிறம் மாறாது விளங்கும் இயல்பு இருக்கிறதே –

அதற்கு என்றென்றும் மதிப்பு உண்டு என்பதை நாம் மனப்பூர்வமாக நம்பலாம்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா


# தூக்கம் வராதே!



(நேற்றைய தொடர்ச்சி)

அவர் போட்ட கூச்சலைக் கேட்டுத் தெருவில் போய்க் கொண்டிருந்தவர்களெல்லாம் அங்கு கூடி விட்டார்கள். வேம்பு சாஸ்திரியும் "நான் எவ்வளவு படித்தவன்! சாஸ்திரம் சோதிடம் சொல்வதில் நிபுணன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நேற்று இந்த ஊருக்கு வந்த இந்த வாத்தியார் நான் சொல்வதை நம்ப மாட்டாராம்! ஹோமம் செய்ய மாட்டாராம்! என்ன அக்கிரமம்" என்றார்.

குருசாமியும் "எனக்கு இவர் சொல்லும் ஹோமத்தில் நம்பிக்கை இல்லை. இன்னும் ஒரு வாரத்தில் என் உயிருக்கே ஆபத்து வரும் என்கிறார். அப்படி உண்மையாக நடந்தால் நான் இவரைக் கொண்டே பெரிய ஹோமம் செய்து இரண்டு பசுக்களை தானமாக இவருக்கே கொடுக்கிறேன். ஆனால் இப்போதோ ஹோமமோ, பசுவை தானம் செய்வதோ நடக்காது" என்றார். அங்கு கூடியவர்களும் வேம்பு சாஸ்திரியிடம் "அவர்தான் அடுத்த வாரம் கண்டம் ஏற்பட்டால் பெரிய ஹோமமும் பசு தானமும் செய்வதாகச் சொல்கிறாரே. பேசாமல் ஒப்புக் கொண்டு போங்களேன்" என்று கூறி அவரை அவரது வீட்டிற்குப் போகச் சொன்னார்கள். வீட்டிற்கு வேம்பு சாஸ்திரி முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு போனார். அவரது மனைவியோ "உங்களுக்கு எதற்கு ஜோஸ்யம், மாந்திரீகம் என்ற அக்கப்போர் எல்லாம்? பேசாமல் புரோகிதம் மட்டும் செய்யுங்கள். அதில் வரும் வருமானமே போதும்" என்றார். வேம்பு சாஸ்திரி யும் "சரிதான் நான் சொன்னபடி குருசாமிக்கு கண்டம் எதுவும் வராது. நானும் பெரிய ஹோமம் செய்யப் போவதில்லை.




பசுமாட்டு தானமும் அவனிடமிருந்து பெறப்போவதில்லை. நல்ல கறவை மாட்டை குருசாமிக்கு நூறு ரூபாய்க்கு விற்றேனே. இது தான் என் போதாத காலம்" என்று தலையில் அடித்துக் கொண்டார்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்

39



மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி, அறவாழவும் அருள் நெஞ்சும் அவனுக்கு இன்றியமையாதன; இன்சொல், ஈகை, எண்ணிச் செயற்படும் திறன், முயற்சி, தூய்மை, விழுமியது நினைத்தல் இவற்றை மேற்கொள்ள வேண்டும்; நீதியும் நேர்மையும் உன்னிடம் இயல்பாக உள்ளன; அவற்றோடு பரிவும் பாடு அறிந்து ஒழுகும் பண்பும் இருத்தல் வேண்டும்".

"நாட்டு மக்களை மதிக்க வேண்டும்; அற ஒழுக்கம் தவறாத அந்தணர், தவ ஒழுக்கத்தில் த்லை சிறந்த முனிவர் இவர்களை மதித்து இவர்பால் பணிவு காட்ட வேண்டும்".

"உழுவார் உலகத்துக்கு அச்சாணி போன்றவர்; அவர்கள் கை மடங்கிவிட்டால் தவசிகளும் பட்டினி தான். சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; சோம்பித் திரியாமல் சுறுசுறுப்பாய்த் தொழில் செய்யும் ஏனைய தொழிலாளிகள் இவர்களை மதித்து, இவர்கள் தேவைகளைக் கேட்டுத் திட்டங்கள் இயற்றிச் செயற்படுத்த வேண்டும்".

"சோம பலையும் மறதியையும் விட்டு ஒழிக்க வேண்டும்" என்று வசிட்டர் இர ஆத்திசூடியை அறிவித்தார். "மேலும், இளைஞர் தவறும் இடங்கள் சில உள்ளன. மங்கையரின் அழகு மயக்கம் தருவதாகும்; அவர்கள் அங்கைகளைத் தொட்டு விட்டோம் என்பதால் அவர்கள் மயக்கிய அறிவுரைகளைக் கேட்டுப் பாதை தவறக் கூடாது. கட்டிய மனைவி ஆயினும் அவளிடம் ஒட்டிய உறவு கொண்டு விட்டதால், ஆட்சியில் அவள் தூண்டும் தவறான செயல்களைச் செய்யக் கூடாது".

"ஆடல் அழகியர் கூடலில், நாட்டின் கடமையை மறந்து ஆட்சியை இழந்தவர் பலர். காமக் களியாட்டம் வேண்டி அமைச்சரிடம் ஆட்சியைத் தந்து ஒதுங்கி விட்டவர் நாமம் இல்லாமல் மறைந்தது உண்டு".

"அரச வாழ்வு சுக போக வாழ்வு அன்று; மக்களைச் சுகப்படுத்த எடுத்துக் கொள்ளும் சூளுரை; விருப்பு வெறுப்புக் காட்டாமல் பொறுப்பாய் ஆட்சியை நடத்த வேண்டும். கண்ணோட்டம் கண்ணுக்கு அழகு தரும்; அது பெண் நாட்டத்தில் முடியக் கூடாது. கலைகளை வளர்ப்பது வேறு; அவற்றை விலை பேசுவது வேறு. புலவர், கலைஞர் இவர்களை மதித்துப் பாராட்டிப் பரிசுகள் தந்து கலைகளை ஊக்குவிக்க வேண்டும்".

**இராமன் ஏற்பு**

இவ் அறிவுரைகளை ஒரு சடங்காக மட்டும் அல்லாமல் தேவைக் காகவும் அவர் இராமனுக்கு எடுத்துக் கூறினார். வசிட்டர் கூறிய அறிவுரைகளைச் செவிமடுத்துப் "புவியாள்வது பொறுப்புமிக்கது" என்று எடுத்துக் கொண்டான்; அன்னை கோசலை தெய்வத்தை வழிபட்டது போல இவனும் 'உலகுக்கு எல்லாம் ஒரு தலைவன் உளன்' என்பதை உணர்த்துபவனாகித் தெய்வ வழிபாடு செய்தான்.

விழாவுக்கு முன்னால் புண்ணியப் புதுப்புனல் கொண்டு வந்து அப்புனிதனை நீராட்டினர். நன்மைகள் அவனை வந்து அடையச் சடங்குகளைச் செய்தனர். வெள்ளை நிறப் புல்லில் கள்ளமில்லாத கார்வண்ணனை அமர வைத்தனர்; அப்புல்லிற்குத் தருப்பை புல் எனப் பெயரிட்டனர். மண நாளுக்கு முந்தியதினம் வழக்கமாக இயற்றும் சடங்குகளைச் செய்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான வீரன் மௌனமாக வேலை செய்கிறான்.
– விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# எருதேறிவருகின்ற சிவனே! எரிபொருள் விலையேற்றம் தெரியுமோ உனக்கு!

பஞ்சம் பசியில் வாடிய ஒரு புலவன் இறைவனைப் பார்த்து கடிந்து கொள்கிறான்.

உண்பதற்கு உணவில்லை. பசி வயிற்றைக் கிள்ளுகிறது. இந்தநிலையில் யான் என்ன செய்ய முடியும்?

சரி,உணவுதான் இல்லையென்றால், கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித் தான் குடிக்கத்தான் கற்பித்தானா... என்று கேட்கிறான்?

கல்லை, மண்ணை உண்ணக்கூடிய தாகச் செய்திருந்தாலாவது நான் அதனைக் காய்ச்சிக் குடித்துப் பசியாறியிருப்பேன்.

ஆனால் நீயோ! அதைச் செய்யவில்லை என்று வருந்துகின்ற அந்தப் புலவனின் இந்தப் பாடல் அவன் எத்துணை பசியுடன் இருந்திருப்பான் என்பதை எடுத்துக் காட்டும்.

ஆக படைத்தவன் படியளப்பான் என்ற வகையில், அவனிடம் இரப்பதைத் தவிர - அவனைக் கடிந்து கொள்வதை விட வேறு வழி ஏதுமில்லை என்பதாக அந்தப் புலவனின் பாடல் அமைகிறது.

அந்தப் புலவனின் பாடலையும் எங்கள் நாட்டில் டீசல் 75 ரூபாயாலும் பெற்றோல் 50 ரூபாயாலும் அதிகரித்ததையும் நினைத்த போது, ஓ! சிவனே என்று சிவனைக் கடிய வேண்டும் போல் இருக்கிறது.

சிவனே! உனக்கென்ன குறை. எடுத்தவுடன் வெள்ளை எருதேறி அன்னை பராசக்தியுடன் சுற்றி வருவாய். ஈரேழு உலகமும் ஓடித் திரிவாய்.

பெற்றோல், டீசல் எதுவும் உனக்குத் தேவையில்லை. ஏன்? ஐ.ஓ.சி பக்கமே நீ வந்திருக்க மாட்டாய்.

சூறையம் காட்டில் நள்ளிரவு வேளையில் நட்டம் பயின்றாடும் உனக்கு; இலங்கையில் தெரு வீதி மின் விளக்கு நின்ற கதை தெரியுமோ. அல்லது எரிபொருளுக்கு உச்ச விலை ஏற்றி நள்ளிரவு வேளையில் நட்டம் பயின்ற கதை தான் தெரியுமோ.

என்ன செய்வது தண்ணீரை, வெந்நீரை எரிபொருளாய் ஊற்றி வாகனம் ஓடத்தான் செய்தாயா? அல்லது உன் மூத்த மகன், முழுமதிச் சந்திரனுக்குக் கொடுத்த சாபத்தையேனும் தடுத்தாயா? அவன் பூரணமாக இருந்திருந்தாலும் பரவாயில்லை. பசில் அமைச்சர் தெருவிளக்கை அணைக்கட்டும் என்று விடலாம்.

ஆனால் தேய்பிறைச் காலம் தெருவையல்லோ இருளாக்கி விட்டிருக்கு.

பரவாயில்லை, இனியேனும் என் மீது உனக்கு இரக்கம் உண்டாயின், ஓர் உதவி செய்திடுக.

அண்ணன் புடின் வாழுகின்ற நாட்டில் எனக்கும் ஒரு பிரஜாவுரிமை தந்திடுக. இங்கு அடிக்க முடியாவிட்டாலும் ஈனருக்கு உதவிய ஈனர்களையேனும் அதட்டும் நாட்டில் வாழ்ந்த திருப்தி இருக்கும்.

# மின்சாரம் தடைப்படும்

ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் நுண்கலைபீடம், ஆவரங்கால்.புத்தூர், மட்டுவில், நாகம்மாள் கோவில் அம்பலவாணர் வீதி-உடுவில், நாவற்காடு-அச்சுவேலி, பெரிய பொக்கணை, ஊறணி, வாதரவத்தை, வீரவாணி, அண்ணாமலையார் ஸ்ரீராகவேந்திரா என்ரபிறைசஸ், அவுனோர் (பிவிரி) லிமிடெட், பிரிட்டிஷ் கவுன்சில், கார்கில்ஸ் பூட்சிற்றி -கன்னாதிட்டி, தம்றோ, எவகிறீன் அச்சகம், ஞானம்ஸ் விடுதி .ஹரிகணன் பிறைவேட் லிமிரட், ஹற்றன் நஷனல் வங்கி (மின்சார நிலைய வீதி) .ஐபிசி தமிழ் , யாழ் தொழில் நுட்ப கல்லூரி.LOLC , இயற்கை விஞ்ஞான பீடம், நொதேர்ன் மருத்துவமனை , மக்கள் வங்கி- ஸ்டான்லி வீதி, ராஜா தியேட்டர், விஞ்ஞான பீடம், சூரிய உதயம் (வீனஸ் வைத்திய சாலை), தியாகி அறக் கொடை நிலையம், போதனா மருத்துவமனை அவசர பிரிவு, பல் கலைகழகக் கல்லூரி, பல்கலைகழக விடுதி, கலைப்பீடம், பி.சி.சி. ஏ.எஸ் கல்லூரி, செலிங்கோ, கஜமுகன் வன்பொருள் வளாகம், கமலேஸ்வரி, லதுசியாந்த் விடுதி, லிங்கம் கிரீம் ஹவுஸ், மெஹாமோல், என்.எஸ். ஆர் வளாகம், றியோ கிரீம் ஹவுஸ், சிவராதா புடவையகம், சிவதாஸ் கட்டிட வளாகம், றொப்பாஸ் மற்றும் அன்னை நாகாபூட் சிற்றி, அம்மன் வீதி கந்தர்மடம், அரசடி பழம் வீதி சந்தி , அரசடி வீதி சீனியர் வீதி சந்தி, ஆரிய குளம்- பருத்தித்துறை வீதி, பேருந்து நிலையம், மணிக்கூட்டுகோபுர வீதி, ஸ்டான்லி வீதிசந்தி, இல்லுப்பையடி சந்தி, ஐயனார் கோவிலடி, கைலாசபிள்ளையார் கோவில், கலட்டி பிறவுண் வீதி, கன்னா திட்டி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி சந்தி, கஸ்தூரியார் வீதி நாவலர் வீதி சந்தி, மனோகரா நாவலர் வீதி, மாவடி, நாச்சிமார் கோவிலடி, நல்லூர் கோயில், நாவலர் வீதி , இராசாவின் தோட்டம், நாவலர் வீதி, மணிக்கூட்டுக்கோபுர வீதி, பேருந்து நிலையம், நீராவியடி ஸ்டான்லி வீதி, பலாலி வீதி, பிஸாஹட் மற்றும் ஐபிசி தமிழ், ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி, மின்சார நிலைய வீதி , ரக்கா வீதி சுண்டிக்குளி, கோயில் வீதி சந்தி, இராமநாதன் வீதி புகையிரத குறுக்குச்சந்தி, றொசல் கட்டிடம் வெலிண்டன் சந்தி, சிவராஜா அவென்யூ பலாலி வீதி, ஆரியகுளம், தட்டா தெரு கே.கே.எஸ் வீதி சந்தி, விக்டோரியா வீதி, விலிங்டன், வின்சர், யாழ் மருத்துவமனை பலாலி வீதி, வெளிவாரி பட்டப்படிப்புகள் நிலையம், திண்ணை விடுதி, நெதேர்ண் இண்டஸ்ரீஸ்- கொக்குவில், கொமர்ஷல் வங்கி-பலாலி வீதி, பனிக் கல்லேன்சந்தி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி சந்தை, 53ம் பிரிவு இராணுவ முகாம்-கொடிகாமம், அல்லாரை, கச்சாய், கொடிகாமம் பேருந்து நிலையம், டச்சு வீதி, மீசாலை, எருவன், கொடிகாமம், கரம்பைகுறிச்சி, கரம்பன், கறுக்காய், வரணி, கெற்பெலி, கொடிகாமம் குடமியன், மந்துவில், மிருசுவில் வடக்கு, நாவற்காடு, புத்தூர்சந்தி, சுட்டிபுரம், தாவளை இயற்றாலை, வாகையடி, வாழைத்தோட்டம், கலைவாணி, மாசேரி, வெள்ளம்பொக்கட்டி, நெல்லியடி இலங்கை வங்கி, கார்கில்ஸ் நெல்லியடி, ரூபின்ஸ் மருத்துவமனை, கரணவாய் பிரதேச செயலகம், நெல்லியடி எச்.என்.பி, கரணவாய், மத்தோணி, முடக்காடு, நாவலர்மடம், நெல்லியடி-பருத்தித்துறை வீதி, நெல்லியடி மருதம், நெல்லியடி-கொடிகாமம் வீதி, தூதாவளை, விக்னேஸ்வரா, கரவெட்டி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் நியூஸ்ரீல்பி விரிலிமிடெட் - இரும்பு தொழிற்சாலை, தந்திரி மலைசந்தி (கய சிங்கபுர இராணுவ முகாம்), அழகாபுரி (அடப்பங்குளம்), இலுப்பைக்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம் 1 வது பண்ணை, முதலியார் குளம், முதலியார் குளம் (கல்லறைக்கு அருகில்), நேரியகுளம், சின்ன குளம், சின்னசிப்பிகுளம், தந்திரிமலை வீதி, துட்டு வாகை, பூ-ஓயா, ஈரப் பெரியகுளம் இராணுவ முகாம், கவுலூம் ஆடை தொழிற்சாலை குருந்து பிட்டிய, தேசிய இளைஞர் பயிற்சி முகாம், வைரவ புளியங்குளம், ஆதிவிநாயகர்கோவிலடி, அழகல்லி (தீருவேகம), அளுத்கம, ஈரற்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தடி, ஈரப் பெரிய குளம், கல்குண்டாமடு, கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், மூன்று முறிப்பு, நவகம, பகல அளுத் வத்த, புபுதுகம, வேரகம, ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், கற்குளம், கூமரசங்குளம், மதுரா நகர்கல்நாட்டின குளம், பெரியகூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் ஒல்லி மோட்டை, ஆவேமரிய ஐஸ்தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீர்வழங்கல் சபை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், கார்கில்ஸ் பூட்சிட்டி- மன்னார், கொன்வென்ட் வீதி, மன்னார் நகரம், மூர் வீதி, நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), இளையோர் சேவை மையத்தடி, பள்ளிமுனை, புனிதசெபஸ்டியன் தேவாலயம், யு.சி மைதானம்,ஈ கடலேரி வீதி, புகையிரத நிலையம்-சாந்திபுரம், சவுத்பார் இராணுவ முகாம், தரவன்கொட்டு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## மார்ச் 14 முதல் மாணவர்களை

# பாடசாலைக்கு அழைப்பது தொடர்பில் சுற்றறிக்கை

மார்ச் 14 முதல் மாணவர்களை பாடசாலைக்கு அழைப்பது தொடர்பில் விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக, கோவிட் - 19 தொற்றுநோயைக் கருத்தில்கொண்டு மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாணவர்களை பாடசாலைக்கு அழைக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

எவ்வாறாயினும், எதிர்வரும் 14ஆம் திகதி முதல் அனைத்து மாணவர்களையும் வழமைபோன்று பாடசாலைகளுக்கு அழைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா புதிய சுற்றறிக்கையின் ஊடாக அறிவித்துள்ளார்.

கோவிட் தொற்றுக் காரணமாக பாடசாலைகளை நடாத்திச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டால் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் மேலதிக நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பம் உள்ளதாகவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## அறியாமமையே துன்பங்களுக்குக் காரணம்

❖ ஆன்ம சக்தியை அளிக்கவல்ல உதவியே முதன்மையானது. அறிவை அளித்தது அடுத்தது. உடலுதவி கடைசியானது. பௌதீக தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வதால் உலகத்தின் துன்பங்களையெல்லாம் தீர்த்து விட முடியாது. மனிதனின் இயல்பு மாறும் வரையில் இந்த பௌதீக தேவைகள் தோன்றிக் கொண்டே தான் இருக்கும். துன்பங்களும் அவனை வருத்திக்கொண்டுதான் இருக்கும். எத்தனை பௌதீக உதவிகளாலும் அதனை முழுவதுமாகத் தீர்த்துவிட முடியாது. இந்தப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு மனிதர்களை தூயவர்கள் ஆக்குவதுதான்.

❖ நாம் காணும் எல்லாத் தீமைகளுக்கும் எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் அறியாமையே. மனிதன் ஒளி பெறட்டும், கல்வி பெறட்டும், தூயவனாகட்டும், ஆன்மீக வலிமை பெறட்டும். அதன் பிறகு மட்டுமே உலகின் துன்பங்கள் தீரும். அதற்கு முன்பு அல்ல.

❖ நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டையும் தர்மசாலையாக மாற்றலாம். நாடு முழுவதையும் வைத்தியசாலைகளால் நிரப்பலாம். ஆனால் மனிதனின் குணம் மாறும் வரையில் அவனுடைய துன்பம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும். இடையூறு இல்லாமல் நாம் செயல் புரிய வேண்டும் என்று பகவத் கீதை மீண்டும் மீண்டும் கூறுவதை நாம் படிக்கிறோம். இயல்பாகவே எல்லாச் செயல்களும் நன்மை, தீமைகளின் கலவையாகவே உள்ளன.

❖ யாருக்கோ, எங்கோ சிறிதாவது நன்மை தராத ஒரு செயலை நாம் செய்ய முடியாது. அது போலவே எங்காவது யாருக்காவது சிறிது துன்பம் தராத செயலையும் செய்ய முடியாது. எல்லாச் செயல்களும் நன்மை, தீமைகளின் கலவையாகவே இருக்கும் என்றாலும் இடைவிடாமல் செயல் புரியவே நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 17

இரண்டு பிரேரணைகள் சில பிரதேச செயலகப் பிரதேசங்களில் பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை பரிந்துரைத்தன. பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை உருவாக்குவதற்கு போதிய அளவு சனத்தொகை இந்த பிரதேச செயலகப் பிரதேசங்களில் இல்லை என்பதை குழு கண்டறிந்தது. ஆனால் தேர்தல் தொகுதிகளை உண்டாக்கும் போது இந்த பிரேரணைகளை கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது.

இரண்டு பிரேரணைகள் சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேர்தல் தொகுதிகளை உருவாக்கும்படி கோரி இருந்தது. முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 4.2% இலும் மற்றும் 3.9% இலும் உள்ளதை குழு அவதானித்தது. அதேநேரத்தில் ஒரு உறுப்பினருக்கான சனத்தொகை வீதம் 5.0% ஆகும். தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் போது இந்த சமூகங்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கின்ற வகையில் பிரேரணைகளை முடிந்த அளவு சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**சில பிரேரணைகள் கம்பஹா மாவட்டத்தில் சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேர்தல் தொகுதிகளை உருவாக்கும்படி கோரி இருந்தன. முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 4.2% இலும் மற்றும் 3.9% இலும் உள்ளதை குழு அவதானித்தது. அதே நேரத்தில் ஒரு உறுப்பினருக்கான சனத்தொகை வீதம் 5.0% ஆகும். அதனால் அவர்களுக்கென்று தேர்தல் தொகுதிகளை உருவாக்காமல் இந்த சமூகங்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கின்ற வகையில் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன.**

எட்டு (08) சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை, ஏனென்றால் அவை எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்கவில்லை மற்றும் குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை.

சுருக்கமாகக் கூறினால், 8 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 4 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் அத்துடன் மேலும் 1 பிரதேச செயலகப் பிரிவு 4 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், தொகுதிக்கான சராசரி மக்கள் தொகைக்கு-7.0% மற்றும் + 4.8 % இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக் கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து கம்பஹா மாவட்டம் 20 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு (33), கட்டான (38), திவுலப்பிட்டிய (94), மீரிகம (115), வியாங்கொடை (96), மினுவாங்கொட கிழக்கு (77), மினுவாங்கொட மேற்கு (81), கட்டுநாயக்க (33), ஜா-எல (40), வத்தளை (30), றாகம (31), கம்பஹா (58), அத்தனகல்லை (93), மஹர கிழக்கு (65), மஹர மேற்கு (38), வெலிசர (32), களனி (32), பியகம (26), தொம்பே (56), பூகொட (109) என்பனவாகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம நிலதாரி பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (b2) இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை (b2) –கம்பஹா மாவட்டம் தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்

| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நீர்கொழும்பு | 91453 | 11334 | 13085 | 1216 | 117088 |
| தொம்பே | 98963 | 1017 | 11152 | 405 | 111537 |
| ஜா-எல | 109281 | 5706 | 744 | 2828 | 118559 |
| களனி | 102334 | 6349 | 2455 | 1526 | 112664 |
| கட்டான | 94030 | 10351 | 9123 | 4120 | 117624 |
| கட்டுநாயக்க | 110822 | 2141 | 466 | 685 | 114114 |
| திவுலப்பிட்டிய | 115739 | 1113 | 73 | 160 | 117085 |
| மினுவங்கொட மேற்கு | 113269 | 713 | 5884 | 419 | 120285 |
| மினுவங்கொட கிழக்கு | 114378 | 752 | 77 | 484 | 115691 |
| மீரிகம | 115221 | 537 | 465 | 196 | 116419 |
| வியாங்கொடை | 105509 | 1011 | 7072 | 363 | 113955 |
| பூகொட | 115788 | 377 | 1835 | 183 | 118183 |
| றாகம | 103380 | 4282 | 539 | 3362 | 111563 |
| வெலிசர | 79480 | 8132 | 19077 | 8252 | 114941 |
| அத்தனகல்லை | 91068 | 1082 | 21113 | 780 | 114043 |
| வத்தளை | 78557 | 31631 | 2187 | 2630 | 115005 |
| பியகம | 103624 | 1167 | 1530 | 876 | 107197 |
| கம்பஹா | 114149 | 663 | 149 | 425 | 115386 |
| மஹர மேற்கு | 117716 | 1400 | 511 | 1194 | 120821 |
| மஹர கிழக்கு | 111708 | 624 | 84 | 257 | 112673 |
| கம்பஹாமாவட்டம் | 2086469 | 90382 | 97621 | 30361 | 2304833 |

## களுத்துறை மாவட்டம் பற்றிய தகவல்கள்

வட அகலாங்கு 6°19' மற்றும் 6°49' கிழக்கு நெட்டாங்கு 79°58' மற்றும் 80° 18' இடையில் 1,598 சதுர கிலோமீற்றர் கொண்ட நிலப்பரப்பை உள்ளடக்கியதாக களுத்துறை மாவட்டம் அமையப் பெற்றுள்ளது. மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 43.4 சதவீதமான நிலப்பகுதியை உள்ளடக்கியுள்ள இம்மாவட்டம் 1,576 சதுர கிலோமீற்றர் தரைப் பிரதேசத்தையும் மற்றும் 22 சதுர கிலோமீற்றர் உள்ளக நீர்ப்பிரதேசத்தையும் உள்ளடக்கியுள்ளது. உள்ளக நீர்ப்பிரதேசம் மாவட்டத்தின் மொத்தப்பரப்பில் 1.4 சதவீத பரப்பில் பரந்து காணப்படுகின்றது.

வடக்கே கொழும்பு மாவட்டத்தையும், தெற்கே காலி மாவட்டத்தையும், கிழக்கே இரத்தினபுரி மாவட்டத்தையும் மேற்கே கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ள களுத்துறை மாவட்டம் மேல் மாகாணத்திற்கு தெற்கே அமையப் பெற்றுள்ளது. 176 சதுர கிலோமீற்றர் (11%) [illegible] ஆம் [illegible]த்தின் நில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரம் கடல் மட்டத்திலிருந்து 720 + மீற்றர் வரை மாற்றமடைந்து அமையப் பெற்றுள்ளது.

**மேல் மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 43.4 சதவீதமான நிலப்பகுதியை உள்ளடக்கியுள்ள களுத்துறை மாவட்டம் 1,576 சதுர கிலோமீற்றர் தரைப்பிரதேசத்தையும் மற்றும் 22 சதுர கிலோமீற்றர் உள்ளக நீர்ப் பிரதேசத்தையும் உள்ளடக்கியுள்ளது. வடக்கே கொழும்பு மாவட்டத்தையும், தெற்கே காலி மாவட்டத்தையும், கிழக்கே இரத்தினபுரி மாவட்டத்தையும் மேற்கே கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. 2012 அமைய மாவட்டத்தின்சனத்தொகை 1,221,948 ஆகும்.**

சனத்தொகை மற்றும் வீடுகளின் கணக்கெடுப்புக்கு (2012) அமைய மாவட்டத்தின் சனத்தொகை 1,221,948 ஆகுமென்பதோடு, சனத்தொகை அடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 775 நபர்கள் ஆகும்.

2012 ஆம் ஆண்டின் தகவல்களுக்கமைய 10 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு மட்டம் 97.2% வீதமாகும். மாவட்டத்தின் தலைநகரமான களுத்துறை, கொழும்பிலிருந்து 41 கிலோ மீற்றர் தொலைவில் அமையப் பெற்றுள்ளது.

(தொடரும்...)

## வீட்டின் கூரை...

நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் கரவெட்டி, கிழவிதோட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் வெளியில் சென்றதை சாதகமாகப் பயன்படுத்தி வீட்டின் கூரையூடாக உள்நுழைந்த திருடர்கள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளையும் பணத்தையும் திருடிக் கொண்டு சென்றுள்ளார்கள்.

இது தொடர்பில் வீட்டின் உரிமையாளரினால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இம் முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மோப்ப நாய் சகிதம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

## கடற்றொழிலாளர்...

யில் நல்லெண்ணச் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்களுக்கும் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இரு நாட்டு கடற்றொழிலாளர் பிரதிநிதிகளும் தங்களது கருத்துக்களையும் ஆதங்கங்களையும் வெளியிட்டனர்.

குறிப்பாக, இந்தியக் கடற்றொழிலாளர்களினால் மேற்கொள்ளப்படும் அத்துமீறி எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் முறை காரணமாக பாதிப்புக்களை எதிர் கொள்ளும் கடற்றொழிலாளர்கள் சார்பாக, வட மாகாண கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அ. அன்னராசா உரையாற்றுகையில்,

தொப்புள் கொடி உறவிற்கு தடையாக இருக்கின்ற இழுவைமடிவலைத்தொழிலை உடனடியாக நிறுத்துமாறு இந்தியக் கடற்றொழிலாளர்களை வினயமாகக் கேட்டுக் கொண்டதுடன், வளங்களை பாதிக்காத நாட்டுப் படகு போன்ற தொழில் முறைகளில் இந்தியக் கடற்றொழிலாளர்கள் ஈடுபடும் பட்சத்தில் நிபந்தனைகளுடன் வளங்களைப் பகிர்ந்து கொள்ள இலங்கை கடற்றொழிலாளர்கள் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை கருத்து தெரிவித்த இந்தியக் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், இழுவைமடித் தொழிலால் வளங்கள் அழிக்கப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்ததுடன், மாற்றுத் தொழில் முறைக்கு தம்மை தயார்ப்படுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். (ம-33,104)

தன நிதானய
திகதி - 2022.03.11
சீட்டிழுப்பு இலக்கம் - 733
F 24 26 44 82
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

மஹஜன சம்பத
திகதி 2022/03/11
சீட்டிழுப்பு இலக்கம் 4703
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
E 0 0 2 5 4 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 11/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1051
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
W 17 39 41 43 80

## வவுனியாவில்...

டன், எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் சாரதியான பெண் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-250)

## காஸ் அடுப்பு...

செல்வபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் கறி சமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது குறித்த காஸ் அடுப்பு வெடித்துள்ளது.

சமையலில் ஈடுபட்டவர் அடுப்புக்கு அருகில் இல்லாத காரணத்தினால் அவர் எந்தவிதமான காயங்கள் அல்லது சேதங்கள் இல்லாமல் தப்பியுள்ளார். (ம-281)

## நெருக்கடி...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது.

"ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கிடையில் ஏற்பட்டுள்ள போரால் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. எனவே, உள்நாட்டிலும் விலை அதிகரிப்பு இடம்பெறுவதைத் தடுக்க முடியாது.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம், எரிபொருள் விலையை அதிகரித்துள்ள நிலையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் விலை அதிகரிப்பை மேற்கொள்ளக் கூடும்.

நாட்டு மக்களுக்குத் தற்போதும் நாம் நிவாரணங்களை வழங்கி வருகின்றோம். நெருக்கடி நிலைமை எப்போது தீரும் என இப்போது உறுதியாகக் கூறமுடியாது.

ஏனெனில் உலக விவகாரங்கள்கூட உள்நாட்டு விடயத்தில் தாக்கம் செலுத்தும். எது எப்படி இருந்தாலும் தேசிய பிரச்சினைகளை நாம் நிச்சயம் தீர்ப்போம்" என்றார். (ம)

## அதிகரிக்க...

எதிர்காலத்தில் எரிவாயு விலை அதிகரிக்கலாம்.

இன்று உலகில் அதிகளவில் எரிவாயு விலை உயர்ந்துள்ளது. எனவே உண்மையைச் சொல்லத் தயங்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரக் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"மின்சாரக் கட்டணத்தை கண்டிப்பாக உயர்த்த வேண்டிய தேவை உள்ளது. மின்சார சபையால் மின்சாரம் வழங்க முடியாவிட்டால் என்ன செய்வது? எனவே, மின் கட்டணத்தை கண்டிப்பாக உயர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆனால் எப்போது நடக்கும் என்று எங்களுக்கு கூறமுடியாது" என்றார்.

மேலும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, பேருந்துகள் மற்றும் முச்சக்கரவண்டிகளின் கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டும் என அந்த சங்கங்கள் கோரியுள்ளன.

முச்சக்கரவண்டிகளின் முதலாவது கிலோமீற்றருக்[illegible] கட்டணம் அறவிடப்பட [illegible] என அகில இலங்கை முச்சக்கரவண்டிச் சாரதிகள் தொழிற்சங்க சம்மேளனம் கோரியுள்ளது.

அத்துடன் இரண்டாவது கிலோமீற்றருக்கான கட்டணம் 50 ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அந்த சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார். (ம)

## வர...

இலங்கையில் அனைத்து வகை பெற்றோல் மற்றும் டீசல்களின் விலையை அதிகரித்து பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முன் மொழிவுக்கு நிதி அமைச்சு அனுமதியளித்துள்ளது.

இந்த விலை உயர்வு நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருகிறது.

அதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 254 ரூபாயும் ஒரு லீற்றர் டீசலின் புதிய விலை 176 ரூபாயும் என விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், 95 ஒக்ரைன் பெற்றோலின் விலை 283 ரூபாயாகவும் சுப்பர் டீசலின் விலை 254 ரூபாயாகவும் விற்பனை செய்யப் படவுள்ளது.

இலங்கை வரலாற்றில் இதுவே அதிகரித்த எரிபொருள் விலை ஏற்றமாகும். (ம)

அரிசி, பருப்பு, சீனி உட்பட

# அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும்

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அரிசி, பருப்பு, சீனி உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடுமென அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

பண மிதப்பின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் பெறுமதி தீர்மானிக்கப் படுவதால், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் சென்விரத்ன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலரின் பெறுமதி மிதக்க விடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளை எப்படித் தீர்மானிப்பது தொடர்பாக இன்னும் சரியான முடிவுக்கு வரமுடியவில்லை.

இது சம்பந்தமான அறிக்கையை அடுத்த வாரத்தில் வெளியிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# எதிரணியினர் அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டும் - எஸ்.பி திஸாநாயக்க

(கொழும்பு)

தேசிய அரசு என்பதற்கு அப்பால், தற்போதைய சூழ்நிலையில் எதிரணிகள் நிபந்தனையற்ற ஆதரவை அரசுக்கு வழங்க வேண்டும் என்று கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது நெருக்கடியான காலகட்டம், எனவே, தேசிய அரசு என்பதற்கு அப்பால் எதிரணிகள் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டும் என்றார். (ம)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1680 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022 / 03 / 11 | தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
Q 02 08 34 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 51,982,150/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.11
சீட்டிழுப்பு இல: 3841
வர்ணம்: செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,494,740/-
வெற்றி இலக்கங்கள் 41 49 64 75
ஆங்கில எழுத்து F
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 145
சீட்டிழுப்பு திகதி 11.03.2022
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 | 20 | 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,831,960/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,160,899/-
திகதி 2022-03-11
சீட்டிழுப்பு வாரம் 3392
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 24 33 37 45
கன்னி
6 7 6 2 7 1 9
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,778,260/-
அபிவிருத்தி லொத்தர் சபை

12
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 15 18 20 23 26
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 856
வர்ணம் ஊதா
திகதி 2022.03.11
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 220,993,663/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1506
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2022.03.11
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,153,600/-
வெற்றி இலக்கங்கள் 04 16 35 39
ஆங்கில எழுத்து T
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னங்காணி விற்பனைக்குண்டு

எழுதுமட்டுவாள் A9 வீதியிலிருந்து 1½ தூரத்தில் 15 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. 5 ஏக்கர்களாக பிரித்தும் கொடுக்கப்படும். (10542)

**077 653 1980, 074 037 1960**

10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

## UK அல்லது கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற... (C-3941)

**WORLD EDUCATION CONSULTANCY**

அலுவலகம்: புதிய உயர் தபாலகம் வளாகம், ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை, சாவகச்சேரி.

**0779265447 / 0217200989**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## விரைவு பொதிகள் சேவை

## V2 TRAVELS

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3942)

**0768226240** DHL

## O/L 2021 மாணவர்களுக்கான

துரித மீட்டல் வினாவிடை வகுப்பு

**Paper Class**

ஆரம்பம் ⇨ 13.03.2022 ஞாயிறு

பிற்பகல் 2.00 தொடக்கம் 5.00 மணிவரை

*யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலில்*

**விஞ்ஞானம்** – திரு. S.றிஷி

நேரம் : சனிக்கிழமை 2.00 pm - 3.30 pm
ஞாயிற்றுக்கிழமை 2.00 pm - 3.30 pm

**கணிதம்** – திரு. P.அன்ரன்

நேரம் : சனிக்கிழமை 3.30 pm - 5.00 pm
ஞாயிற்றுக்கிழமை 3.30 pm - 5.00 pm

வெளிமாணவர்களும் கலந்துகொள்ள முடியும். (C-3948)

மேலதிக தொடர்புகளுக்கு

**புதிய நாவலர் கல்வி நிலையம்**

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம். **077 459 8440**

## கட்டடம் விற்பனை

காரைநகர் வாரிவளவில் உள்ள பெரிய நாற்சார் கட்டடம் (பெறுமதியான கதவுகள் மற்றும் தீராந்திகளுடன் கூடிய கட்டடம்) விற்பனைக்குண்டு.

பார்வையிடும் நேரம் : 13.03.2022 ஞாயிறு காலை 9.00 - 12.00 மணிவரை (10594)

**077 866 6155**

## மணமகள் தேவை

1982 இல் பிறந்த பூராடம் 1 ஆம் பாதம், கிரக பாவம் 20 1/4, உயரம் 5' 3", சுயதொழில் புரியும் இந்து மணமகனுக்கு மணமகள் தேடுகின்றோம். தொழில் புரிபவர் விரும்பத்தக்கது. (10579)

**021 225 6823**

## வேலைவாய்ப்பு

நீங்கள் O/L, A/L பயின்றவரா? 077 999 4807 என்ற இலக்கத்திற்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க .

GROW YOUR OWN WAY WITH INNER CIRCLE

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார்

- நிர்வாக அதிகாரி
- செயற்திட்ட அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- மேற்பார்வையாளர்

அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக் காலம் 13,500/= தொடக்கம் 20,000/= வரை. பின் குறைந்தது 45,000/= ரூபாவிற்கும் அதிக வருமானம் பெறும் வாய்ப்பு. (10595)

**Inner Circle (Pvt)Ltd.**

இல. 100/3, முட்டாசுகடைச் சந்தி, யாழ்ப்பாணம்.

WhatsApp : 076 756 5659

## A/L தோற்றியவர்களுக்கான வாய்ப்பு

சிங்கள, ஆங்கில வகுப்புக்கள் இலகுவழியில் துரிதமாக கற்க வேண்டுமா?

**Monthly 600/= மட்டுமே** (10583)

கோண்டாவில் | வட்டுக்கோட்டை | சுன்னாகம் | மானிப்பாய்

**077 767 7773**

## BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's Join — PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



BTEC HND

# Civil Engineering

WITH STRUCTURAL DESIGN
Leading to BEng (Hons)

23 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Civil Engineerig கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Civil Engineerig நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்.

Pearson | University of East London

**077 710 2131**
**077 068 8828**

INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

23 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION (C-3943)

021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk | BCAS Ranked "Platinum Partner" No.1 once again


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.